# புயல்



- அனைத்து கதவுகள், ஜன்னல்கள், திறந்திருந்தாலும் மூடியிருந்தாலும் அவைகளை உறுதிபட மூடிவைக்கவும்.
- விலை உயர்ந்த பொருட்களையும், ஆவணங்களையும் பாதுகாப்பாக உள்ளே வைக்கவும்.
- மண்ணெண்ணெய், லாந்தர்கள், டார்ச்சுகள் மற்றும் உதிரி பேட்டரிகள் ஆகியவற்றைப் பாதுகாப்பான மற்றும் கைக்கு எட்டும் தூரத்தில் வைக்கவும்.
- எச்சரிக்கைச் செய்திகளைத் தொடர்ந்து கேட்கவும். உள்ளூர் அலுவலர்களிடம் தொடர்பு வைத்துக் கொள்ளவும்.
- உயரமான கட்டிடங்களில் இடியை கட்டுப்படுத்தும் சாதனங்கள் போன்றவற்றை பொருத்த வேண்டும்.
- குடியிருப்பின் மேல் மாடியில் தங்கியிருப்பதை தவிர்க்கவும். தளப்பகுதிக்கு அருகிலேயே தங்கியிருக்கவும்.

# அறிந்து கொள்வோம்

# சூறாவளி

## சூறாவளி

வளி மண்டலத்தில் ஏற்படும் பருவநிலை மாற்றங்களால் வலிமையான காற்று சுழன்றடிப்பதும், அதன் தொடர்ச்சியாகக் கடும் மழை பொழிவதையும் சூறாவளி என்கிறோம்.

## சூறாவளிக்கு முன்பு செய்ய வேண்டியவை



- சூறாவளிப் பருவத்திற்கு முன்னதாகவே உங்கள் இருப்பிடத்தைச் சோதனை செய்து தேவையான பழுது பார்த்தலை மேற்கொள்ளவும்.
- கதவுகள், ஜன்னல்கள், வாயில்களை உறுதிபட மூடிவைக்க வேண்டும்.
- விலை உயர்ந்த பொருட்களையும், ஆவணங்களையும் நீர் புகாத பைகளில் பாதுகாத்து வைக்கவும்.
- குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்துகள் மற்றும் குடிநீர் ஆகியவற்றைச் சேமித்து வைக்கவும். குடும்ப அவசர கால பெட்டியைத் தயாரித்துக் கொள்ளவேண்டும்.
- தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் பேட்டரியால் இயங்கும் வானொலி பெட்டிகளை இயங்கும் நிலையில் வைத்திருக்கவும்.
- எச்சரிக்கை செய்திகளைத் தொடர்ந்து கேட்க வேண்டும்.



## சூறாவளியின் போது செய்ய வேண்டியவை

- அமைதியாக இருக்கவும்.
- அரசு நிறுவனம் வெளியேற அறிவுறுத்தும் வரை, சூறாவளியின் போது வெளியில் செல்லாமல், பாதுகாப்பான கட்டடங்களில் தங்கி இருக்க வேண்டும்.
- தாங்கள், வாகனம் ஒன்றை வைத்திருந்து அதில் வெளியேற விரும்பினால் ஆரம்பகட்ட எச்சரிக்கையின்போதே வெளியேறவும். எனினும் வீட்டில் இருப்பதே எப்போதும் சிறந்தது.
- குடியிருப்பின் மேல் மாடிகளில் தங்கியிருப்பதைத் தவிர்க்கவும். தளப்பகுதியின் அருகிலேயே தங்கியிருக்கவும்.
- சமீபத்திய செய்திகள், அறிவிப்புகளை வானொலி, தொலைக்காட்சி மூலம் தெரிந்து கொள்ளவும்.
- பழைய மற்றும் சிதிலமடைந்த கட்டிடங்களிலோ மரத்தின் அருகிலோ தஞ்சமடைவதைத் தவிர்க்க வேண்டும்.
- காற்றடிப்பது நின்றுவிட்டால், சூறாவளி முடிந்துவிட்டதாக நினைத்து விட வேண்டாம். எதிர் திசையிலிருந்து வேகமான காற்று வீச ஆரம்பிக்கலாம்.
- மீனவர்கள் கடலுக்குள் செல்லக்கூடாது. படகுகளையும், கட்டுமரங்களையும் பாதுகாப்பான இடத்தில் கட்டி வைக்க வேண்டும்.

## சூறாவளிக்கு பின்பு



- அதிகாரப்பூர்வமாக பாதுகாப்பானது என அறிவிக்கப்படும் வரை வெளியில் செல்ல வேண்டாம்.
- சமையல் எரிவாயு கசிவு உள்ளதா என்பதைக் கண்டறியவும். ஈரமான நிலையில் மின் சாதனங்களை உபயோகிக்க வேண்டாம்.
- வானொலி, தொலைக்காட்சி மூலம் எச்சரிக்கை அறிவுப்புகளைத் தொடர்ந்து கேட்கவும்.
- பாம்புகள் / பூச்சிகள் கடிக்க வாய்ப்புள்ளதால் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். இதனை தவிர்க்க கொம்பு ஒன்றை வைத்திருக்கவும்.
- துண்டித்து விழுந்த மின் கம்பிகள், பழுதுபட்ட பாலங்கள், கட்டிடங்கள், மரங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்கவும். வெள்ள நீரிலும் செல்ல வேண்டாம்.
- சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருங்கள். தேவைப்படின் கிருமி நாசினியைத் தெளிக்க வேண்டும்.